# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 32

# அந்திக்கிறிஸ்து பற்றின ஆராய்ச்சி

பாகம்-1




## The Study of Antichrist

Part - 1

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# அந்திக்கிறிஸ்து பற்றின ஆராய்ச்சி

## பாகம்-1



## The Study of Antichrist Part-1

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இந்த பாடத்தில் அந்திகிறிஸ்து பற்றின ஆழமான சத்தியத்தை இப்போது அறியலாம்.

இன்று உலகில் மிகவும் உன்னிப்பாகவும் பரபரப்பாகவும் பேசப்படும் ஒரு தலைப்பு "அந்திகிறிஸ்து".

இது கிறிஸ்தவரிடையே ஆர்வத்தைத் தூண்டுகின்ற தலைப்பாக உள்ளது. இதன் காரணமாக அந்திக்கிறிஸ்து குறித்து பலவிதமான கருத்துக்களும், கற்பனைக் கதைகளும் கிறிஸ்தவர்களுக்குள் நாம் காண்கிறோம்.

### யார்? அந்திக்கிறிஸ்து

பொதுவாக இன்று அநேகர், அந்திகிறிஸ்து என்பவன் ஒரு தனி மனிதனாகவும், சாத்தான் ரூபமுடையவனாகவும், எருசலேமை தன் ஆதிக்கத்தில் கொண்டுவந்து, சிதைந்துபோன ஆலயத்தை மீண்டும் கட்டி பின்பு மெதுவாக உலகம் அனைத்தையும் பிடித்து 7 வருடங்கள் அரசாளுவான் என விசுவாசிக்கின்றனர். ஆனால் இன்றைய சூழ்நிலையில் ஒரு தனிநபர் முழு உலகையும் ஆள்வது என்பது கற்பனை செய்யமுடியாத ஒன்றாக உள்ளது.

மேலும் அநேக புத்தகங்கள், படங்கள் முதலியன அந்திக்கிறிஸ்துவைக் குறித்து வெளியிட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

சிலர் இந்த எண் '666" என்ற அந்திகிறிஸ்துவின் அடையாளமாக கம்பியூட்டர் சிப்ஸ் மூலம் நெற்றிகளிலும், கைகளிலும் உள்ள தோலுக்கு அடியில் பொருத்தப்படும் என்று நம்புகின்றனர். வேறு சிலர் இந்த 666 என்ற எண், கிரெடிட் கார்டுகளின்மூலம் நிறைவேறும் என்கின்றனர்.

சிலர் அந்திக்கிறிஸ்து பற்றி ஆர்வமும் எதிர்பார்ப்பும் நிறைந்தவர்களாகவும், அந்திக்கிறிஸ்துவின் வருகை எதிர்காலத்திற்குரியது என்றும் நம்புகின்றனர். முடிவு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால், அந்திக்கிறிஸ்துவின் வருகை குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்த எதிர்பார்ப்பின் அடிப்படையில், அந்த அந்திகிறிஸ்து ஹிட்லர் என்று சிலர் நினைத்தனர்.



ஏனெனில் அவர் நாசிச கொள்கையை உலக முழுவதும் பரப்ப முயற்சி எடுத்து, உலகின்மீது ஆதிக்கம் செலுத்தி, இரண்டாம் உலகப்போருக்கு வித்திட்டதால் இந்த எண்ணம் உருவாக காரணமாயிற்று. ஆனால் ஹிட்லரின் வாழ்ந்தார் மறைந்தார் . உலகம் எப்போதும் போலவே இயங்கிக் கொண்டிருந்தது.

☞ பின்பு 1980-களில், ஈராக்கின்அதிபதியாகிய சதாம் ஹுசேனை அந்திக்கிறிஸ்துவாக நினைத்தனர். அவர் குவைத்துக்குள் படையெடுத்தபோது, இந்த எண்ணம் வலுத்தது. ஆனாலும் 10 வருடங்களுக்குப்பிறகு பிடிபட்டவுடன், அந்த எண்ணமும் பொய்த்துப்போனது.

☞ இன்று சிலர் ஒசாமா பின்லாடன் அந்த அந்திகிறிஸ்துவாக இருக்கலாம் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இவர் உலகின் வல்லரசு நாடாகிய அமெரிக்காவின் தேடுதல் வேட்டையிலிருந்து தப்பியிருப்பதால் இந்த எண்ணம் வலுத்துவருகிறது.

☞ அந்திகிறிஸ்து ஏற்கனவே பிறந்து ரஷ்யாவிலும், இஸ்ரயேலில் வளர்ந்து வருவதாக சிலரால் நம்பப்படும் கட்டுக்கதைகளும் பரவிக்கொண்டிருக்கிறது.

☞ இவ்வாறு அநேகர் அந்திக்கிறிஸ்துவைப் பற்றி கூறும்போது, வேதம் கூறும் உண்மை சத்தியம் என்ன? தேவனுடைய வசனத்தில் தேடி வாசிக்கலாம்.
அந்திகிறிஸ்துவைப் பற்றி கிறிஸ்தவர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். ஏனெனில்,

**2தெசலோனிக்கேயர் 2:1-3**

“எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு பாருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்நாள்(கிறிஸ்துவின் இரண்டாம் வருகை) வராது”

ஆம். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்பே “பாவ மனுஷனாகிய”அந்திகிறிஸ்து வந்தாகவேண்டும் - என்பதை மேற்சொன்ன வசனத்தின்மூலம் அறியலாம். நம் கர்த்தரின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கிறிஸ்தவர்கள், அதற்கு முன்பு அந்திக்கிறிஸ்துவின் வருகை சம்பவிக்கும் என்பதால் இப்பாடத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணரமுடியும். வேதாகமத்தில் அந்திகிறிஸ்து பற்றி வேறு சில பெயர்களிலும் கூறப்பட்டுள்ளது.

**வேதத்தில் அந்திக்கிறிஸ்துவுக்கான பெயர்கள் :**

I. பாழாக்கும் அருவருப்பு

**மத்தேயு 24:15**

“பாழாக்கும் அருவருப்பை க் குறித்து தானியேல்சொல்லியிருக்கிறானே, நீங்கள் அதை பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக்காணும்போது”

இங்கு கர்த்தர் **பாழாக்கும் அருவருப்பைக்** குறித்து பேசுகிறார். அருவருப்பு என்பது என்ன? இது அந்திகிறிஸ்துவை குறிக்கும் ஆவிக்குரிய பெயர் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

**தானியேல் 7:20-25**

"அதின் தலைமேலுள்ள பத்துக்கொம்புகளைக் குறித்தும் , தனக்கு முன்பாக மூன்று கொம்புகள் விழுந்துபோக எழும்பினதுமாய், கண்களையும் பெருமையானவைகளைப் பேசும் வாயையுமுடையதுமாய், மற்றவைகளைப் பார்க்கிலும் பருமனாகத் தோன்றினதுமாயிருந்த அந்த வேறே கொம்பைக் குறித்தும், அவற்றின் பொருளை அறிய மனதாயிருந்தேன், நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும், இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன். அவன் சொன்னது... நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாகும்.அது எல்லா ராஜ்யங்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப்போடும். அந்தப் பத்துக்கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்.அவர்களுக்குப்பின்பு வேறொருவன் எழும்புவான். அவன் முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப்போட்டு, உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான். அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்"

**II. யார் அந்த கொம்பு அல்லது இராஜா?**

இதுவும் அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும் மற்றொருபெயர் ஆகும்.

**2தெசலோனிக்கேயர்2:3,4**

"விசுவாச துரோகம் முந்திநேரிட்டு கேட்டின் மகனாகிய **பாவமனுஷன்** வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ... தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்"

**III. யார் இந்த 'பாவமனுஷன்"?**

இதுவும் அந்திக்கிறிஸ்துவின் வேறொருபெயர் ஆகும்.

ஆக, மேற்கண்ட எல்லா வசனங்களையும் படித்துப்பார்த்தால் அந்திகிறிஸ்து என்பது ஒரு தனி நபர் அல்லது ஒரு இராஜா என்றே தோன்றுகிறது. இதைக்குறித்து ஒரு முடிவுக்கு வருமுன், வேறொரு வசனத்தை கவனிப்போம் -

**1யோவான்2: 18**

"அந்திகிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்போதே அநேக அந்திகிறிஸ்துக்கள் இருக்கிறார்கள்"

இங்கு அப்.யோவான் அந்திகிறிஸ்து என்று ஒருமையில் ஆரம்பித்து, பின் இப்போதே அநேக அந்திகிறிஸ்துக்கள் உள்ளனர் என்று அநேகரைக் குறித்து பன்மையில் பேசியிருப்பதைக் கண்டு நாம் மிகவும் வியப்படைகிறோம். அந்திகிறிஸ்து ஒரு தனி நபர் அல்லது ஒரு இராஜாவாக இனி வருவான் என அநேகர் நம்பியிருக்கும்போது, அப்.யோவான் காலத்திலேயே அதாவது 2000 வருடங்களுக்கு முன்பே அநேக அந்திகிறிஸ்துக்கள் ஆதிகால சபையிலிருந்திருக்கின்றனர் என்பது நமக்கு ஆச்சரியமளிக்கிறதல்லவா?

வேதத்தில் அந்திகிறிஸ்து பற்றி குழப்பமான, ஒன்றுக்கொன்று முரண்பாடான விஷயங்கள் இருப்பதுபோல் நமக்கு தோன்றுவதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஆனால் இவையனைத்திற்கும் வேதத்தில் தான் விளக்கம் உள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

**யோவான்17:17** ன்படி, "உமது வசனமே சத்தியம்"

இது பற்றி கீழ்க்காணும் வசனத்தின் மூலம் புரிந்துகொள்ள முயற்சிப்போம்-

**2தெசலோனிக்கேயர் 2:7,8**

"அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது.. நீக்கப்படும்பொது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனை கர்த்தர் தமது வாயின் சுவாசத்தினால் அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்"

அப்.பவுல் இதுபற்றி கூறும்போது, அந்திகிறிஸ்து அல்லது அக்கிரமக்காரன் ஆதிசபை காலத்திலிருந்தே கிரியை செய்துவருவதுடன் இயேசுவின் 2ம் வருகையில் அவன் அழிக்கப்படுவதாக கூறுகின்றார். ஆக அந்திகிறிஸ்து 2000 வருட வயதுள்ள ஒரு அமைப்பாக(System) இருக்கும். அந்திகிறிஸ்து ஒரு அமைப்பே தவிர தனி நபரல்ல என்பதை முதலில் உணர்வது அவசியமாகும். 2000 வருடகாலமாக ஒரு மனிதன் உயிரோடு இருப்பது சாத்தியமில்லாத ஒன்று. அந்திக்கிறிஸ்து ஒரு அமைப்பாக இருந்தாலும்கூட அநேகரால் இதை புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் அது 'அக்கிரமத்தின் இரகசியம்".

இந்த இரகசியம் என்ன? என்பதுபற்றி இப்போது ஆராயலாம்.

## அந்திகிறிஸ்து என்பதன் பொருள் என்ன?

"கிறிஸ்துவுக்கு எதிராக" அதாவது 'கிறிஸ்துவுக்கு விரோதமானவன்" என்பது பொருளாகும்.

- கிறிஸ்துவுக்கு பதிலாக (Instead of Christ)
- கிறிஸ்துவின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளுதல ' (taking the place of Christ)
- கிறிஸ்துவுக்கு போலியாக (Counterfeit of the Christ - Ref: Strongs concordance P500,473 & 5547)

**Strong's Greek Lexicon Search Results**

500. antichristos an-tee'-khris-tos from 473 and 5547; an opponent of the Messiah:--antichrist.

473. anti an-tee' a primary particle; opposite, i.e. instead or because of (rarely in addition to):--for, in the room of. Often used in composition to denote contrast, requital, substitution, correspondence, etc.

5547. Christos khris-tos' from 5548; anointed, i.e. the Messiah, an epithet of Jesus:--Christ.

இந்த அந்திகிறிஸ்து அமைப்பானது வெறுமனே கிறிஸ்துவுக்கு விரோதியாயிராமல் கிறிஸ்துபோல் வேஷம் தரித்து, அவரைப்போல் போலியாக நடிக்கும் ஒரு அபாயகரமான அமைப்பாகும்.

## எது இந்த போலியான கிறிஸ்தவ அமைப்பு?

மத்தேயு 24:15

"பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக்காணும்போது"

இதன் பொருள் என்ன? அந்திகிறிஸ்து அமைப்பானது பரிசுத்தஸ்தலத்தில் நிற்பதாக நாம் காண்கிறோம்.

**2தெசலோனிக்கேயர் 2:4**

"அவன் எதிர்த்து நிற்கிறவனாயும் தேவனுடைய ஆலயத்தில் தேவனைப்போல் உட்கார்ந்து"

இங்கு பரிசுத்தஸ்தலம் மற்றும் தேவனுடைய ஆலயம் என்பது எதைக் குறிக்கிறது? பின்வரும் வசனத்தில் பதிலைக் காண்போம்-

1கொரிந்தியர் 3:17

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் "

**1தீமோத்தேயு3:15**

"தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது"

இவ்வாறு அந்திகிறிஸ்து அமைப்பானது உண்மையான தேவனுடைய சபைக்குள் நுழைந்துவிடும் என்பதே மேற்கூறப்பட்ட வசனத்தின் பொருளாகும்.

இது ஏன் அல்லது எவ்வாறு சம்பவிக்கிறது? இதற்கான பதிலைபின்வரும் வசனத்தில் காண்கிறோம்-

**2தெசலோனிக்கேயர்2:3**

"எவ்விதத்திலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு.."

பாவ மனுஷனாகிய அந்திகிறிஸ்து சபையில் வெளிப்படுமுன்பாக விசுவாச துரோகம் நேரிடவேண்டும் என்று கூறுகிறார்.

**1தீமோத்தேயு 4:1**

"ஆகிலும் பிற்காலங்களில்.. சிலர் விசுவாசத்தைவிட்டு விலகி, பிசாசுகளின் உபதேசத்திற்கும், வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் செவிகொடுப்பார்கள்"

அப்.பவுல் இந்த நிருபத்தை எழுதின காலத்திற்கு பின்னர் வரும் 200 - 300 வருட காலத்தைக் கூறுகிறார். அப்போது வேதத்தில் இல்லாத அநேக கள்ளஉபதேசங்கள் அல்லது

புறஜாதியாரின் உபதேசங்களை ஏற்றுக்கொண்டு, மகாபரிசுத்தமான விசுவாசத்தைவிட்டு (யூதா20) அநேகர் விலகிவிடுவார்கள். மகா பரிசுத்த விசுவாசம் என்பது - வேதத்தை அடிப்படையாகக்கொண்டு உபதேசங்கள் மீது வைக்கும் நம்பிக்கையாகும்.

வஞ்சிக்கிற ஆவிகள் - கேட்கிறவர்களுக்கு பரிசுத்தமானதாகவும், தேவசாயலை உடையதாகவும் தோன்றுகின்ற போதனைகள். ஆனால் பரிசுத்தம் ஏற்படுத்தாமல் வஞ்சிக்கும். உ.ம் - பாதிரிமார்கள் திருமணம் செய்யாதிருத்தல், வெள்ளிக்கிழமை மாம்சம் உண்ணாமை, ஆனால் ஆதிகால சபையின் சீஷர்கள் மத்தியில் இது கடைப்பிடிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை.

பிசாசுகளின் உபதேசங்கள் - இது வேதத்தில் காணப்படாத, அஞ்ஞானிகளும், சத்தியத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும் நம்புகிற போதனைகளைக் குறிக்கும்.
உ.ம்-மனித ஆத்துமா அழியாது, திரியேக தேவன், நித்தியநரகம் போன்றவை.
2ம் 3ம் நூற்றாண்டுகளில் வேதம் படித்து அறிவை பெருக்குவதற்கு பதிலாக அநேக மனிதருடைய விசுவாசப் பிரமாணங்கள் நுழைந்துள்ளது. அதனால் இன்றும்கூட அதிக கிறிஸ்தவர்கள் சத்தியத்தின் அறிவைப்பெறாமல் பெயர்க் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர்.

**ஓசியா 4:6** ல் தேவன் "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்"

இங்கு 'அழிவு" என்பது மகா பரிசுத்தமான விசுவாசத்தின் அழிவு ஆகும். இப்படியாக வேத அறிவிலிருந்து வழிவிலகி, அந்தி கிறிஸ்து அமைப்பு சபைக்குள் நுழையக் காரணமாயிற்று. சபைக்குள் நுழைவதற்கு முன்பே விசுவாச துரோகம் நேரிடும் என்று பார்க்கிறோம். வேதத்தின்படி அந்திகிறிஸ்து அமைப்பானது உலக ஜனங்களோடு தொடர்புடையதாக இல்லாமல், பரிசுத்தஸ்தலமாகிய உண்மை சபையோடு தொடர்புடையதாக இருக்கிறது. இந்த உண்மையானது வெளிப்படுத்தலின் புத்தகம் 12 ம் அதிகாரத்தில் காணப்படும் தீர்க்கதரிசனத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## உண்மை சபைக்குள் அந்திக்கிறிஸ்து அமைப்பு :

**வெளிப்படுத்தல் 12:1**

"அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள். அவள் பாதங்களுக்கு கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் 12 நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன".

இங்கு ஒரு ஸ்திரீயைக் குறித்து பிரமாண்டமாக விவரிக்கப்பட்டுள்ளது

வசனம் 2 "அவள் கர்ப்பவதியாய் இருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்"

அந்த ஸ்திரீ கர்ப்பந்தரித்திருந்ததாக வாசித்தோம்.

வசனம் 5ஐ தொடர்ந்து வாசிக்கையில்

"சகல ஜனங்களையும் இருப்புக்கோலால்ஆட்சி ... ஆண் பிள்ளையைப் பெற்றாள். அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொ"ள்ளப்பட்டது

அவள் ஆண்பிள்ளையைப் பெற்றெடுப்பாள், அது தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படும் என்று வாசிக்கிறோம். தொடர்ந்து 6ம் வசனத்தை வாசிப்போம் -

"ஸ்திரீயானவள் வனாந்திரத்திற்கு ஓடிப்போனாள். அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது".

அந்த ஸ்திரீ பிள்ளையைவிட்டு வனாந்தரத்திற்கு 1260 நாட்கள் ஓடிப்போகிறதாக வாசிக்கிறோம்.

- யார் அந்த ஸ்திரீ?
- அவள் சூரியனைஅணிந்திருப்பதும்,
- சந்திரனை பாதத்தின் கீழ் வைத்திருப்பதும் - எப்படி சாத்தியமாகும்?
- அந்த ஆண்பிள்ளை யாரைக் குறிக்கும்?
- பிள்ளையைப் பெற்றபின்பு வனாந்தரத்திற்கு அவள் ஓடிப்போகக் காரணம் என்ன?
- 1260 நாளளவும் என்பதன் பொருள் என்ன?

இப்பொழுது இந்த அடையாளங்களுக்கான பொருளை காண்போம் -
ஒரு ஸ்திரீ - கர்த்தராகிய இயேசுவின் உண்மை சபையைக் குறிக்கிறது.

**2கொரிந்தியர் 11:2**

"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் .."

அந்த சபையைக் குறித்து விவரிக்கப்பட்டள்ளதைக் காண்போம் -

சூரியனை அணிந்திருந்தாள் - சபை சூரியனை அணிந்திருந்ததைக் கூறுகிறது. அந்த சூரியன் என்பது எதைக் குறிக்கிறது?

**2கொரிந்தியர் 4:4**

"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"

ஆம். இந்த "சுவிசேஷத்தின் ஒளியானது" சூரியன் என அடையாளம் காண்பிக்கப்படுகிறது. ஏனெனில் சூரியன் வெளிச்சத்தின் பிறப்பிடமாக இருக்கிறது. ஆகவே சபையானது புதிய ஏற்பாட்டின் ஆச்சரியமான சுவிசேஷ ஒளியை "அணிந்திருக்கிறது".

"அவள் பாதங்களின் கீழே சந்திரன்" - "சந்திரன்" என்பது வெளிச்சத்தை சூரியனிடமிருந்தே பெற்று ஒளியை பிரதிபலிக்கிறது. சபைக்கு அப்படிப்பட்ட ஒளியைப் பிரதிபலிக்கும் சந்திரனாக பழையஏற்பாடு இருக்கிறது. இது சுவிசேஷத்தின் ஒளியை வாங்கி, தன்னிலுள்ள நிழல், தீர்க்கதரிசனங்கள் மற்றும் அடையாளங்கள் மூலம் பிரதிபலிக்கிறது.

**“அவளுடைய பாதத்திற்குக் கீழாக்**- பழைய ஏற்பாடானது சபை வகுப்பார் விசுவாசத்தில் உறுதியாக நிற்க உதவுவதைக் குறிக்கிறது. ஏனென்றால் இதைப்பற்றின ஞானம் பெரிதான உற்சாகத்தைத் தருகிறது.

**‘‘அவள் சிரசின்மேல் பன்னிரெண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தது** ”- இங்கு “சிரசு”(தலை) என்பது கற்றுக்கொள்ளும் பாகத்தையும்,

**“பன்னிரெண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடம்** ” - ஒளியின் பிறப்பிடத்தையும் குறிக்கிறது. இது சபைக்கு தேவனால் நியமிக்கப்பட்ட, ஒளிதரக்கூடியவர்கள்அல்லது போதகர்களாகிய பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைக் குறிக்கும்.

மேலும் “ஸ்திரீ” கர்ப்பந்தரித்திருந்தாள் - சபை எவ்வாறு கர்ப்பந்தரித்தது?



**இது முற்றிலும் கண்ணுக்குத்தெரியாமல்**
**சபையின் சரீரத்திற்குள்ளாக**
**வளர்ச்சி கண்ட ஒரு புதிய ஜீவனை சித்தரிக்கிறது.**

இது ஒரு அருமையானஅடையாள பாஷையாகும்.

சபையின் சரீரத்திற்குள் அந்திக்கிறிஸ்து அமைப்பானது கருவுற ஆரம்பித்ததை சித்தரிக்கிறது.

பின்பு அந்த ஸ்திரீ ஆண்பிள்ளையை பெற்றெடுத்து, அதைவிட்டு விலகி, வனாந்தரத்திற்கு 1260 நாட்கள் ஓடிப்போனாள். இங்கு ஆண்பிள்ளை என்பது பின்னாளில்’ பாவமனுஷனாக வளர்ச்சியடைந்த அந்திக்கிறிஸ்து அமைப்பின் ஆரம்பநிலையை அடையாளமாக குறிக்கிறது. இதை நாம் இரண்டு வசனங்களை ஒப்பிட்டு உறுதிப்படுத்தலாம் -

**வெளிப்படுத்தல் 12:5**

“சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை
அவள் பெற்றாள். அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும்
அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது”

**2தெசலோனிக்கேயர் 2:4**

“ அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ,
ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை
உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து,
தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்”

இங்கு அந்திக்கிறிஸ்துவின் அமைப்பின் வளர்ச்சியின் வெவ்வேறு நிலைகள் மிகத் தெளிவான அடையாளங்கள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

- கர்ப்பத்தில் ‘**கருவுற்றிருந்த** ” - கண்ணுக்குப் புலப்படாத நிலை
- ‘**பிள்ளையாக பிறந்த**” - கண்ணுக்குப் புலப்பட்டாலும் வல்லமை குன்றிய நிலை
- ‘**வளர்ந்த**” - கண்ணுக்குப் புலப்படும், அதேசமயம் வல்லமையுள்ள நிலை

சபையின் சரீரத்திற்குள் இந்த அமைப்பானது உருவானதை வாசிக்கிறோம் -

**1யோவான்2:18,19**

"பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள். அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம். அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை, நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே, எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்"

இந்த அமைப்பின் ஆரம்ப கால அங்கங்கள் 'ஸ்திரீயின் சரீரமாகிய" சபையினிடத்திலிருந்து வந்தது தெளிவாக உள்ளது.

## அந்திக்கிறிஸ்து அமைப்புக்கு அதிகாரங்கள் எத்தனை வருடங்கள்?

1260நாட்கள் வனாந்தரத்திற்கு ஓடிப்போகும் காலம் - அந்திக்கிறிஸ்து அமைப்பைவிட்டு சபையானது மனதளவிலும், செயலிலும் பிரிந்திருந்த காலகட்டத்தைக் குறிக்கும். இதை பின்வரும் வசனத்திலும் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 12:14**

"ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும் காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது"

அதே காரியம், அதே கால அளவுகள், வேறுவிதமாக கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு காலம், காலங்கள் அரைக்காலம் என்பது என்ன? இதே கால அளவுகள் பின்வரும் வசனத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது -

**தானியேல் 7:25**

"உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான், அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்"

இங்கு தேவனுடைய பரிசுத்தவான்கள் மீது அந்திக்கிறிஸ்து அமைப்பிற்கு அதிகாரம் அனுமதிக்கப்பட்ட காலத்தைக் குறிக்கிறது. இதே காலஅளவானது வேறு இருகோணங்களில் சொல்லப்பட்டுள்ளதைக் காண்போம் -

**வெளிப்படுத்தல் 12: 6**

"ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது"

**வெளிப்படுத்தல் 13:5**

" ..நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது"

ஆகவே, அந்திக்கிறிஸ்து அமைப்புக்கு அதிகாரம் அனுமதிக்கப்பட்ட இந்தக் காலப்பகுதி, மூன்று கோணங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது- இவைகள் ஒன்றுக்கொன்று இசைவாக உள்ளதை காணலாம் -

| 3 1/2 வருடங்கள் | = | 42 மாதங்கள் | = | 1260 நாட்கள் |
|---|---|---|---|---|
| (42 மாதங்கள்) | | (12+12+12+6) | | (42x 30 நாட்கள்) |

ஒரு தீர்க்கதரிசன வருடம் = 360 தீர்க்கதரிசன நாட்கள்

ஒரு சூரிய வருடம் = $365^{1/4}$ நாட்களுக்குச் சமம்

ஒரு சந்திர வருடம் = 360 நாட்களுக்கு சற்று குறைவாக உள்ளது.

இந்த 1260 நாட்களைக் கொண்ட காலப்பகுதி - சூரிய வருடமும் அல்ல, " சந்திர" வருடமும் அல்ல. இது ஒரு கால தீர்க்கதரிசனம்.

மேலும் தீர்க்கதரிசன, கால தீர்க்கதரிசன கணக்கீட்டு முறையின்படி,

ஒரு தீர்க்கதரிசன நாள் = ஒருசொல்லர்த்தமான வருடம்

**எசேக்கியேல் 4:6**

"ஒவ்வொரு வருஷத்துக்குப்பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக்கட்டளையிட்டேன்"

**எண்ணாகமம் 14:34**

" ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்"

ஆகையால் அந்திக்கிறிஸ்துவின் அமைப்பு, 1260 வருட காலம் நிர்ணயிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

## அந்திக்கிறிஸ்துவின் ஆவி :

இந்த அந்திகிறிஸ்துவின் ஆவி என்ன?என்பதுபற்றி நாம் வாசிப்போம் -

**1யோவான் 4:3**

" மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்தஆவியும்
தேவனால் உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட
அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே.
அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது".

இங்கு ஆவி என்பது **யோவான்6:63** ல், பேசப்பட்டுள்ள ஆவி - உபதேசங்களைக் குறிக்கும்.

இங்கு அந்திக்கிறிஸ்துவின் ஆவி என்பது அந்திக்கிறிஸ்து அமைப்பின்கள்ள உபதேசங்கள் மற்றும் கள்ளபோதனைகளைகுறிக்கும்.

இந்த அமைப்பின் போதனைகள், உபதேசங்கள் நிருவப்பட்டதை பார்ப்போம் -

**2தெசலானிக்கேயர் 2:9**

" சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யானஅற்புதங்களோடும்.." நடக்கும்.

இப்படி 2000 வருடபழமைவாய்ந்த அந்திக்கிறிஸ்து அமைப்பு சபைக்குள்ளாக இருந்ததை பார்த்திருக்கிறீர்களா?

உங்கள் பதில் இல்லை என்று இருக்குமானால், இது உணர்ந்துகொள்ளமுடியாத "**அக்கிரமத்தின்இரகசியம்**"(2தெச 2:7).

- இந்த 1260 வருடஇரகசியத்தை நாம் அடையாளம் காணமுடியுமா?
- இக்காலப்பகுதி ஏற்கனவே நிறைவேறிவிட்டதா? எதிர்காலத்திற்குரியதா? தற்போது நிறைவேறிவருகிறதா?
- 666 என்ற எண்ணின் பொருள் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன?
- அந்திக்கிறிஸ்து அமைப்பு எது?

- இவைகளுக்கான பதிலை அந்திகிறிஸ்து பாகம்-2ல் காண்போம்.

**தேவ கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/